# <u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
## <u>OS No: 142/2023</u>

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் **Dw3** தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | தீமத்ஷா |
| த.க.பெயர் | முனியப்பன் |
| கிராமம் | சின்ன பரிச்சிபாளையம் |
| மாவட்டம் | |
| வயது | 25 |

**<u>பி.சா.3 நாள் 16.04.2026</u>**

**<u>முதல் விசாரணை:</u>** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் வழக்கின் 26 ம் பிரதிவாதி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

1) 18.11.2019 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் பிசாஆ 1

**<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>**

நான் எம்பிஏ படித்துள்ளேன். எனக்கு வேலை கிடைத்துவிட்டது, 2 மாதத்தில் வேலைக்கு சேர உள்ளேன். தாவா சொத்து என் தகப்பனாருக்கு கிரய வகையில் பாத்தியம் என்றால் சரிதான். பிசாஆ 1 ஆவணத்தில் என் தகப்பனார் கிரய வகையில் பாத்தியப்பட்ட சொத்தை தான் எனக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்தி வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால சரிதான். என் தகப்பனார் என்ன விஸ்தீரணம் கிரயம் பெற்றாரோ அதை மட்டும் தான் எனக்கு செட்டில்மெண்ட் எழுத முடியும் என்றால சரி. என்னிடம் காண்பிக்கப்படுவது என் தகப்பனார் பெற்ற கிரய ஆவணத்தின் நகல் என்றால் சரி. அது **வாசாஆ 29.** என் தகப்பனார் கிரயம் பெற்ற ஆவணத்தில் ரீச 116/1 முதல் 18 க்கு 56-3/4 சென்ட் மட்டும் தான் கிரயம்

பெற்றதாக கண்டுள்ளது என்றால சரிதான். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் முதல் இன சொத்தாக 56-3/4 சென்ட் நிலமும் 2 ம் இனமாக ரீச 116/1 மற்றும் 6 ல் 6-1/2 சென்ட் கூடுதலாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால சரிதான். பிசாஆ 1 ஆவணத்தில் 2 ம் இனமாக சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணம் வாசாஆ 29 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பழைய கச 164 என்றால் சரிதான். பழைய கச 164 ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 3.73 என்றால் சரிதான். ரீசர்வே படி ஏக்கர் 3.48 தான் பூமியில் உள்ளது என்றால் சரிதான். ரீசர்வேயில் அளக்கும்போது பாகஸ்தர்கள் அனைவருக்கும் விஸ்தீரணத்தில் குறைவு ஏற்படும் என்றால் சரிதான். அந்த விஸ்தீரண குறைபாட்டை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றால் சரி. மற்ற வாதி, பிரதிவாதிகளுக்கு தாவாவில் கோரியவாறு பங்கு விகிதாசாரத்தை ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால சரி. பிசாஆ 1 ல் கூடுதல் விஸ்தீரணம் கண்டு ஏற்பட்டுள்ளது என்றும் நான் அந்த வீஸ்தீரணத்திற்கு பாகம் கோர முடியாது என்றும் என் தகப்பனார் பெற்ற கிரயத்தின் வீஸ்தீரணத்தை தான் நான் கோர முடியும் என்றால சரி. வழக்கில் கோரியவாறு தீர்ப்பாவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.04.16 15:37:15 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS